திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியத் தலைவர் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த ஊர் பசும்பொன் என்றிருந்தாலும் அவர் வாழ்நாட்களிலே அதிக நாள் சிறைச்சாலையிலும், மீதமுள்ள நாட்களிலே மதுரை, திருநகர் வீட்டிலும் வாழ்ந்திருக்கிறார்கள். பல்வேறு சிறப்புக்களை நம்முடைய கலைஞர் அவர்கள் அரசின் சார்பிலே செய்து, அவர் பிறந்த சொந்த ஊரான பசும்பொன்னிலேகூட நினைவு மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. முத்துராமலிங்கத் தேவர் வாழ்ந்து இறந்ததுகூட மதுரை, திருநகர் வீட்டிலேதான். அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அவர் வாழ்ந்த வீட்டினை ஒரு நினைவு இல்லமாக மாற்றித்தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக பசும்பொன் கிராமத்திலேயுள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சமாதி ரூ.7,28,778.00 செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதைப்போலத்தான், அந்த இடத்தை நினைவு இல்லமாக மாற்றுவதற்கு இழப்பீட்டுத் தொகை ரூ.3,87,198.00 அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்லாமல், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருடைய திருவுருவச் சிலைககு சென்னையில் ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் 30 ஆம் நாள் அரசின் சார்பாக மாலையிட்டு, மரியாதை செலுத்தப்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் மதுரையில் அவர் வாழ்ந்த இல்லம் ஒரு வாடகை வீடு என்பதோடு, அந்த வாடகை வீட்டில் தற்போது இந்திரா காந்தி மெட்ரிகுலேஷன் பள்ளியும் நடந்து கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்குரியவர்களுக்கு 1991 இல் அந்த வீட்டை விற்றுவிட்டார்கள். எனவே, இந்தச் சூழ்நிலையில் இந்த இடத்தை நினைவு இல்லமாக அமைப்பதற்கான வாய்ப்பில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 158, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

158—

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்

***7977—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999 மார்ச் 23]

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஒருமுகப்படுத்தி அரசே ஒரு வாரியம் அமைக்க ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன் சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைத் தங்களின் அனுமதியோடு தருகிறேன்.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஒருமுகப்படுத்துவதற்கு, மத்திய அரசால் வெளியிடப்பட்ட ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் இதர அற நிலையங்களுக்கான சட்டம், 1960-ன்கீழ் 15 பேர் கொண்ட குழுமம் அமைத்திட அரசின் ஆணை ஏற்கெனவே இருக்கிறது. குழுமத்தின் பணிக் காலம் ஏற்கெனவே முடிவடைந்துவிட்டபடியால், மீண்டும் 15 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு, நியமிக்க அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அம்பத்தூரிலும் மற்ற இடங்களிலும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. அவற்றிற்கு முறையான நிதி வசதி இல்லாத காரணத்தால் அவர்களுடைய செயல்பாடுகளிலே பல குறைபாடுகள் காணப்படுகின்றன. அவர்கள் தங்களுடைய செயல்பாடுகளைத் தொடர்ந்து செய்ய முடியவில்லை. ஆகவே, அரசு பணம் செலவு செய்து, தனியாக நிதி ஒதுக்கி ஒரு வாரியம் அமைக்குமானால் தொண்டார்வம் உள்ள நல்ல சமூக சேவகர்கள் அவர்கள் தொண்டுகளைச் சிறப்பாகச் செய்ய முடியும். ஆகவே, அவ்வாறு தமிழக அரசின் சார்பிலே செய்ய முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கேட்டவண்ணம் ஏற்கெனவே இந்தக் குழுமத்தினுடைய பார்வையில் 800-க்கு மேற்பட்ட தொண்டு நிறுவனங்கள் வர இருக்கின்றன. எனவே, அந்தக் குழுமத்தினுடைய செயல்பாடுகளில் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஏற்புடையதாக இருக்கும்பட்சத்தில், அவர்களுக்கு அரசு வழங்குகின்ற மானியத்தை வழங்குவதற்கு வாய்ப்பிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே சமூகநல வாரியம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. அந்த வாரியத்தின் மூலமாகவும் மாண்புமிகு உறுப்பினர், தான் பரிந்துரை செய்கின்ற

அந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவியைப் பெறுவதற்கு வாய்ப்புண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 159, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

159—

விருத்தாசலத்தில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி

***8558—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் நகரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது இல்லை. நிதி நிலைமைக்கேற்ப எதிர்வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும்.

திரு. குழந்தை தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் நகரில் அரசினர் மேல்நிலைப் பள்ளியிலும் மாணவர் விடுதி இயங்கி வருகிறது. அதேபோன்று, அரசு கொளஞ்சியப்பர் கலைக் கல்லூரியிலும் அரிசன மாணவர் விடுதி இயங்கி வருகிறது. இரண்டுக்கும் கட்டடங்கள் இல்லை. விருத்தாசலம் நகரத்திலே இந்த மாணவர்களுக்காக வாடகைக்குக் கட்டடங்கள் கொடுப்பவர்கள் அடிக்கடி காலி செய்யச் சொல்லி விடுகிறார்கள். நகரத்திலே இடம் கிடைப்பதும், கட்டடங்கள் கிடைப்பதும் சிரமமாக இருக்கிறது. அதனால் மாணவர்கள் மத்தியிலே அடிக்கடி போராட்டமும், எதிர்ப்புணர்வும் வந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்தக் குறைபாட்டைத் தவிர்க்க,